R5605

## Gideon - The man of Courage

# கிதியோன் – தைரியசா–யான ஒரு மனுஷன்

நியாயாதிபதிகள் 6:11–40

ஒரு நியாயமான மனுஷன் – பலமான குணாதிசயம் உடையவன்– மிகத்தாழ்மையும், சுய நம்பிக்கையுமுடையவன்– நிரூபணத்திற்கு பிறகு விசுவாசம் – உபசரணை பரிச–க்கப்பட்டது– தேவனுக்காக துணிந்து செயலாற்றுதல்–விசுவாச வளர்ச்சி புது நிரூபணத்தைத் தேடுகிறது.

" நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான் " சங். 65:4

தேவன் தம்முடைய வேலைக்காக தெரிந்துகொண்டவர்களில் ஞானிகளோ, வல்லவர்களோ, ஐசுவரியவான்களோ, பலமுள்ளவர்களோ அநேகரில்லை என்று வேத வசனங்கள் நமக்கு கூறுகின்றன. அவர்கள் உகந்தவர்களாக இருக்கமாட்டார்கள் என்பதாலல்ல. ஆனால் அவர்களது ஞானம், ஐசுவரியம், பலம், தைரியம் ஆகியவை அவர்களை மிகவும் சுய

நம்பிக்கை உடையவர்களாக்கி, போதுமான அளவுக்கு தேவனிடத்தில் நம்பிக்கை உடையவர்களாக இருக்கமாட்டார்கள் என்பதாலேயே ஆகும். மேலும் அவர்கள் போதுமான அளவுக்கு தாழ்மை உடையவர்களாகவும் தேவனுக்கு ஊழியம் செய்ய கிடைத்த சந்தர்ப்பத்திற்காக சந்தோஷப்படுகிறவர்களாகவும் இருக்கமாட்டார்கள். ஒரு துணிச்சலுள்ள கிதியோன் என்ற ஒரு இளம் இஸ்ரயேலனிடம் தேவனுடைய தூதன் ஒரு செய்தியுடன் அனுப்பட்டான். “பராக்கிரமசா—யே கர்த்தர் உன்னோட இருக்கிறார் ” என்ற வாழ்த்துதலைக் கூறினான். கிதியோன் மிகவும் நியாயமாக கூறிய பதிலாவது: “கர்த்தர் எங்களோட இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்கள் எங்கே?”

கானான் தேசம் செழிப்பான தேசம் என்று அறிந்து, மீதியானியர்களும், கிழக்கத்திய மற்ற நாடோடி ஜனங்களும் அடிக்கடி எழும்பிவந்து நிலத்தின் விளைச்சல்களை அபகரித்து செல்வார்கள். இப்படிப்பட்ட காலகட்டத்தில்தான் கிதியோன், மீதியானியார் கோதுமையை பறித்துச்சென்று விடுவார்கள் என்று பயந்து ஆலைக்கு சமீபமாய் போரடித்துக் கொண்டிருந்தான்.

தூதன் அங்கே கிதியோனோடு வேத சாஸ்திரத்தைக் குறித்து விவாதிக்க வரவில்லை; அவனது ஜனங்களை விடுவிப்பதில் அவனை தேவனுடைய ஒரு தூதனாக ஆக்குவதற்கும் ஊக்கமளிப்பதற்கும் ஆகும். மனாசே கோத்திரத்தில் தனது குடும்பம் மிகவும் எளியது என்றும், தன் தகப்பன் வீட்டில் தான் எல்லாரிலும் சிறியவன் என்றும் கூறி எதிர்ப்பு தெரிவிப்பதி—ருந்து அவனது தாழ்மை வெளிப்படுகிறது. நிச்சயமாக தெரிந்துக்கொள்ளுவதில் தவறு நடந்திருக்கிறது, மிகவும் தகுதியான மனுஷன் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கவேண்டும்! அதற்கு தேவதூதன் கூறுகிறதாவது : “நான் உன்னோட கூட இருப்பேன்; ஒரு மனுஷனை முறியடிப்பதுபோல நீ மீதியானியரை முறியடிப்பாய். ”

தேவன் இஸ்ரயேலையும் அவர்களுக்குரிய வைகளையும் காப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்ததை நாம் நினைவுகூரும்போது, இந்த பாதுகாப்பு அவர்கள் தேவனிடம் விசுவாசமாயும், உண்மையாயும் தொடர்ந்து இருப்பதைப் பொறுத்து இருக்கிறது என்பதையும் நாம் நினைவு கூரவேண்டும். அதே உடன்படிக்கையில், அவர்கள் தேவனைவிட்டு விலகி விக்கிரக வணக்கத்துக்கு சென்றால், பலவித சாபங்களை உங்கள் மேலே வரவிடுவேன் என்று கூறியதையும் நாம் நினைவு கூரவேண்டும். அந்த சாபங்கள் அவர்களது விளைச்சலை அவர்களது சத்துருக்கள் அறுத்துகொண்டு போவார்கள் முதலானவை... எனவே தேவன் இஸ்ரயேலர்கள் மேல் ஏன் துன்பத்தை அனுமதித்தார் என்ற கிதியோனின் கேள்விக்கு பதில் என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். தேவன் தம்முடைய உடன்படிக்கையில் உண்மையாக இல்லாம—ல்லை, ஆனால் இஸ்ரயேலர்கள்தான் உண்மையாய் இருக்கவில்லை.

இந்த துரோகத்திற்கு உரிய ரூபகாரம் இந்த பாடத்திலும் அதன் சமய சந்தர்ப்பத்திலும் தெரிகிறது. பாகால் மற்றும் அஸ்தரோத்தின் தோப்புகளுக்கு கிதியோனின் தகப்பன்தான் பொறுப்பானவனாக இருந்தான். அதன் சிலைகள் அவனது வீட்டருகே, அவனது இடத்திலே இருந்தது. தோப்பு என்பது சிலைக்கு அருகே அதை கனப்படுத்துவதற்காக வைக்கப்பட்ட பெரிய தூண்கள். இவைகள் எல்லாம் கிதியோனின் ஜனங்களால் பராமரிக்கப்பட்டன, அவனது தகப்பன்தான் அவர்களுக்குத் தலைவன். இதுதான் இஸ்ரயேலர்கள் கைவிடப்பட்டதற்கும் மீதியானியர்கள் அவர்களை அடிமைப்படுத்தியதற்கும் காரணம்.

வந்திருக்கிறது யார் என்பது நிச்சயமாக கிதியோனுக்கு தெரியாதிருந்தாலும், உரையாட—ல் இருந்த விஷயம் அவர் மதிப்பிற்குரிய விருந்தாளி என அறிவுறுத்தியது. அவன் விருந்தாளிக்காக ஒரு விருந்தை தயார்செய்துகொண்டு வந்தான். அதை சாப்பிடுவதற்கு பதிலாக அந்த தூதன் அந்த இறைச்சியையும் அப்பத்தையும் கற்பாறையின் மேல் வைத்து, அதின்மேல் ஆணத்தை ஊற்றச்சொல்—, அதை தன் கையிலுள்ள கோ—னால் தொட்டான், அப்பொழுது அக்கினி கற்பாறையி—ருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது, அது ஒரு ப—யாக அங்கீகரிக்கப்பட்டது. இப்படியாக ஒரு அற்புதம் நிகழ்ந்து, வந்திருந்தவர் கர்த்தருடைய தூதன் என்று மெய்ப்பித்து காட்டப்பட்டது. உடனே கர்த்தருடைய தூதன் கிதியோனின் கண்களுக்கு மறைந்து போனார். ஏனெனில் அவருக்கு கொடுக்கப்பட்ட வேலை முடிந்துவிட்டது.

### தூதர்களின் ஊழியம்

நமது மாம்ச கண்களுக்கு தெரியாத ஆவிக்குரிய ஜீவிகளால் நாம் சூழப்பட்டிருக்கிறோம் என்கிற உண்மை இதன் மூலம் விளங்குகிறது. பழங்காலத்தில் தேவன் இந்த தூதர்கள் மூலமாய் மனுக்குலத்திற்கு செய்திகளை அனுப்பினார் என்பதும் வெளியரங்கமாகிறது. இது குறித்து நாம் வேதத்தில் வாசிக்கிறதாவது: “கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்

பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்." "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" எப்பொழுதும் போல் இப்பொழுதுகூட தூதர்கள் தேவனுடைய பிள்ளைகளுடன் இருக்கிறார்கள். அதுவும் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு முன்பிருந்ததைக் காட்டிலும் இன்னும் அதிகமாக இருக்கிறார்கள். ஏனெனில் இப்போது தேவனுடைய ஆவியினால் ஜெநிக்கப்பட்டவர்களாக அவர்களுடைய பிதாவின் கண்களில் விசேஷித்த விதமாக விலையேறப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். சங். 34:7; எபி. 1:14

நம்முடைய ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீடர்களைக் குறித்து, "அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்தில் என் பரம பிதாவின் சமூகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள்" என்று கூறுகிறார். அர்ப்பணம் செய்துகொண்ட கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களுக்குரிய காரியங்களை கவனித்துக் கொள்வதும், அவர்களுக்கு பிரயோஜனம் இல்லாதவைகளி—ருந்து அவர்களை விடுவிப்பதும் தூதர்களின் வேலைகளின் ஒரு பகுதியாய் இருக்கிறது. இது "தேவனிடத்தில் அன்பு காட்டுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" என்பதற்கு இசைவாக இருக்கிறது. ஆனால் இது மாம்சீக நன்மைகளுக்காக அல்ல, புது சிருஷ்டியின் நன்மைக்காக அதைக் குறித்த அக்கறையினால் நடக்கிறது. இந்த தூதர்கள் சுவிசேஷ யுகம் முழுவதும், வல்லமையுள்ளவர்களாக, காணக்கூடாதவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அவருடைய வீட்டின் குமாரர்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறவர்களாக இருக்கிறார்கள். 2 கொரி. 5:6

## கிதியோனின் மகா தைரியம் வெளிப்பட்டது

தூதன் வந்த அந்த நாளின் இரவிலே தேவன் கிதியோனிடம் விக்கிரகங்களையும், பாகா—ன் ப— பீடத்தையும் தகர்த்து, அருகேயுள்ள தோப்பையும், வெட்டிப்போடச் சொன்னார். மேலும் யேகோவா தேவனுக்கு ஒரு ப—பீடத்தைக்கட்டி, அதிலே அவனது தகப்பனின் ஒரு காளையை ப—யிட்டு, தோப்பை வெட்டிய அந்த கட்டை விறகுகளின்மேல் சர்வாங்க தகன ப—யிடச் சொன்னார். அவன் தன் தகப்பனும், சகோதரர்களும், ஊரார்களும் எதிர்ப்பார்கள் என்று பயந்ததினால் இரவிலே இந்த வேலையை செய்து முடித்தான். இந்த வேலையைச் செய்ய தேவன் கிதியோனை அழைத்தார் என்பதை நாம் அறிந்தபோது அவன் எப்படிப்பட்ட தைரியசா— என்று தெரிகிறது.

உண்மையிலேயே நமது ஊழியம் தெய்வீக அதிகாரத்தால் ஏற்பட்டது என்ற திட நம்பிக்கையே, ஒரு சக்தியாக ஒவ்வொரு புருஷன் அல்லது ஸ்திரீயின் உள்ளத்தில் இருக்கிறது என்று நாம் கூறலாம். இந்த காலத்தில் இது குறைவுபட்டிருக்கிறது. தேவன் பேரில் வைக்கும் விசுவாசமும் இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியம் என்று உணர்வதும் குறைவுபட்டிருக்கிறது. "தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து, அதன் பெலனை மறுத—த்து," போதித்தல், ஜெபித்தல், நல்ல முயற்சிகள் ஆகியவை (வழக்கப்படியான) சடங்காச்சாரமான செயலாகத்தான் இருக்கும். இப்படிப்பட்டவர்களை விட்டு விலகும்படி பரிசுத்த பவுல் நமக்கு அறிவுரை கூறுகிறார். தேவனுடைய ஊழியக்காரர்களாக ஆகவும், அவருடைய வார்த்தைகளை அறிந்துகொள்ளவும் நாம் விரும்புகிறோம். சர்வாயுதத்தை தரித்து "ஒருவன் ஆயிரம் பேரை துரத்தலாம்."

ஹார்வ்ட்டு (Harvard) பல்கலைக்கழகத்தில் தன் படிப்பை தொடர்ந்த ஒரு இளம் எபிரேயன் கூறியதாவது: எனக்கு சங்கீதத்தில் திறமை இருக்கிறது. நான் அதை படிக்கிறேன். ஆனாலும் என் வாழ்க்கைக்கு தகுதியான நல்ல ஒரு இலக்கை தெரிந்துக்கொண்டு அதற்கான எனது வாழ்க்கையை அர்ப்பணிக்க விரும்புகிறேன். "சந்தேகதிற்கு இடமில்லாமல் பன்னிரண்டு வயது முதல் இருபது வயது வரையுள்ள இளைஞர்களிடையே இப்படிப்பட்ட ஒரு மனோபாவம்தான் இருக்கிறது. தேவ கிருபையில் தனது வாழ்க்கையை தேவனுக்கும், மனுக்குலத்திற்கு ஊழியம்" செய்வதற்கு அர்ப்பணிக்கிற இளைஞர்கள் சந்தோஷமானவர்கள்! கிதியோன் இப்படிப்பட்ட ஒரு வகையைச் சேர்ந்தவன், இது இந்த பாடத்தில் வெளியரங்கமாகிறது. அவனுக்கு தைரியமும், விசுவாசமும் இருந்தது. அவனுக்கு தேவையானது, தேவனைப் பற்றிய அறிவும், அவருடைய நாமத்தில் அவரது சித்தத்தை நிறைவேற்ற உத்தரவு கொடுக்கப்படவும் வேண்டும்.

என்ன நடந்தது என்பதை கண்டுபிடித்து அந்த ஊரார் கிதியோனின் தகப்பனிடம், அவனை கொலை செய்வதற்கு ஒப்படைக்கும்படி கேட்டார்கள். அப்பொழுது அவனது தகப்பன், "நீங்களா பாகாலுக்காக வழக்காடுவீர்கள்? தன் ப—பீடத்தைத் தகர்த்ததினிமித்தம் பாகால் அவனோட வழக்காடட்டும்" என்று கூறினான். பாகால் தன்னைத்தானே காத்துக்கொள்ள முடியாவிட்டால், இஸ்ரயேலை எப்படிக் காக்கும் என்று ஞானமாய் கேட்டான். அவனது பதில் மிகவும் சக்தி வாய்ந்ததாய் இருந்தது. தங்களை விடுவிக்க

வல்லமையுள்ள வேறே தேவர்களை தேட ஜனங்கள் தயாராயிருந்தார்கள். இந்த சயமத்தில் கிதியோனுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவுக்கு, இசைவாக மீதியானியர்கள் கூடினார்கள். கிதியோன் பற்பல கோத்திரத்தாருக்கு செய்தி அனுப்பியதின் பலனாக முப்பதினாயிரம் வீரர்கள் அவன் பின்னே தாக்குதலை முறியடிக்க வந்தார்கள்.

ஆனால் இந்த சமயத்தில் கிதியோன் தான் செய்வது தேவ சித்தந்தான் என்பதற்கான அடையாளத்தை தேடினான். ஒரு சோதனை என்னவென்றால் ஒரு மயிருள்ள தோலை களத்தின் மீது போடும்போது பனி தோ—ல் மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருக்க வேண்டும். தேவன் அவ்விதமே செய்தார். கிதியோன் தோலைக் கசக்கி அதி—ருந்த பனி நீரை ஒரு கிண்ணம் நிறையப் பிழிந்தான். ஆனால் இது போதுமானதாக இல்லை. மயிருள்ள தோல் பனி நீரை கவர்ந்துக்கொள்ள என்ன ஒரு விசேஷம் இருந்தது என்று யார் சொல்லக்கூடும்? கிதியோன் அந்த சோதனையை தலைகீழாக்கி, தோல் மாத்திரம் காய்ந்திருக்கவும், பூமியெங்கும் நனைந்திருக்கவும் கேட்டான், தேவன் அதையும் அப்படியே செய்தார்.

தேவன் இப்படிப்பட்ட அடையாளத்தை கிதியோனுக்கு செய்து காண்பித்ததால், நாமும்கூட இந்த காலத்தில் தேவனை சோதிக்கலாம் என்று நினைக்கக்கூடாது. நமக்கு எல்லா வகையிலும் அதிக அனுகூலமானவைகள் உண்டு. நமக்கு பின்னே கிதியோன் இன்னும் மற்றவர்களது அனுபவம் ஆயிரவருட காலமாக இருக்கிறது. அதோடுகூட மனுக்குலத்திற்கும் கர்த்தராகிய இயேசுவுக்கும் தேவன் கொடுத்த கிருபைகளைப் பற்றிய பதிவு புதிய ஏற்பாட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. “அதிசயமான ஜீவ வசனங்கள்” நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. விலையேறப் பெற்ற இரத்தத்தின் மேல் விசுவாசம் வைத்திருப்பதின் பலனாக நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டு பரலோக பிதாவினிடத்தில் தொடர்பை பெற்றிருக்கிறோம். நம்முடையது ஒரு வித்தியாசமான காரியம். முன்னமேயே நமக்கு கொடுக்கப்பட்டுள்ள பாடத்தின்படி தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறவர்களாகவும் நமது காலத்திற்குரிய அடையாளங்களை கண்டு நடக்கிறவர்களாகவும், இருக்கும்படியாகவும் தேவன் விரும்புகிறார்.